08_07_2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சிறு தானிய உணவு தயாரிப்புப் பயிற்சி: ஜூலை 13-இல் தொடக்கம்**

சிறு தானிய உணவுகள் தயாரிக்கும் பயிற்சியானது ஜூலை 13-இல் தேசிய குறு, சிறு, நடுத்தரத் தொழில் மையத்தில் தொடங்க உள்ளது. இதுகுறித்து தேசிய குறு, சிறு, நடுத்தரத் தொழில் வளர்ச்சி நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சென்னை, கிண்டியில் உள்ள இந்திய அரசு நிறுவனமான குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி நிலையம், தொழில் முனைவோருக்கான பல்வேறு தொழில்திறன் பயிற்சிகளை நடத்தி வருகிறது. இதன்படி, சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சிகளில், சிறுதானிய உணவுப்பொருள் தயாரிக்கும் பயிற்சியானது ஜூலை 13 முதல் ஜூலை 17 வரை நடத்தப்பட உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பொருள்களான பேப்பர் கேரி பேக்ஸ், நான்ஓவன் துணி பைகள், மருத்துவமனைக்குத் தேவையான மாஸ்க், தொப்பி, அலுமினியம் ஃபாயில் பாக்ஸ், டிஸ்யூ பேப்பர், வாழைநார் பொருள்கள், தென்னநார் பொருள்கள், பாக்குமட்டைத் தட்டுகள் உள்ளிட்டவற்றைத் தயாரிக்க பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், பாரம்பரிய சிறுதானியங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் தினை லட்டு, தினை இனிப்பு பனியாரம், தினை தோசை மிக்ஸ், வரகு புளியோதரை, வரகு பிரியாணி மிக்ஸ், சாமை முறுக்கு மிக்ஸ், சாமை உப்புமா மிக்ஸ், குதிரைவாலி பொங்கல் மிக்ஸ், சிறு தானிய சப்பாத்தி மிக்ஸ், சத்துமாவு மிக்ஸ், கம்பு இட்லி- தோசை மிக்ஸ், சோள அடை உள்ளிட்ட சிறு தானிய உணவுப் பொருள்களுக்கு உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது.

சிறுதானிய உணவுச் சந்தை குறித்த தகவல்களைக் கொண்டும், வர்த்த ரீதியான வல்லுநர்களைக் கொண்டும் இப்பயிற்சிகள் நடத்தப் பட உள்ளன.

மேலும், தொழில் தொடங்குவதற்கான ஆலோசனைகள், திட்ட அறிக்கை தயார் செய்தல், வங்கிக் கடன் குறித்த முறைகள், தரக்கட்டுபாடு விவரங்கள், இயந்திரங்கள், மூலப்பொருள்கள், விற்பனை வாய்ப்பு விவரங்களும் வழங்கப்பட உள்ளன. இதற்கு கல்வித்தகுதி தடையில்லை. ஆகவே, 18 வயது நிரம்பிய இருபாலரும் சேரலாம். எஸ்.சி, எஸ்.டி, மாற்றுத் திறனாளிகளுக்கு 50 சதவீத கட்டணச் சலுகை உண்டு. பயிற்சியின் இறுதியில் இந்திய அரசு சான்றிதழ் வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள், கிண்டி, ஜிஎஸ்டி சாலையிலுள்ள தேசிய குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி நிலையத்தை 99403 18891 என்ற செல்லிடப்பேசியில் தொடர்புகொண்டு பயன் பெறலாம்.

**நாட்டுக்கோழி பண்ணை அமைக்க கிராமப்புற பெண்களுக்கு அழைப்பு**

நாட்டுக்கோழி பண்ணை தொடங்க விரும்பும் பெண்களுக்கு மானியத்துடன் 250 கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் 2015-16 ஆம் ஆண்டு நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி நாட்டுக்கோழிப் பண்ணை வைப்பவர்களுக்கு 250 குஞ்சுகள் வழங்கப்படும்.

இதற்கு மானியத் தொகையாக ரூ. 37,375 வழங்கப்படும். நாட்டுக்கோழி வளர்க்க விரும்புவோர் அருகேயுள்ள கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். இதற்காக, குடும்ப

அட்டை நகலுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி, பகுதியில் உள்ள வங்கியில் கடன் பெறுவதற்கான அனுமதி கடிதம் இணைக்கப்பட வேண்டும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று ஆட்சியர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"வேம்பு, நொச்சி இலை புகை போட்டால் கொசு வராது'**

வேம்பு இலை, நொச்சி இலை ஆகியவற்றை சேர்த்து புகை போட்டால் கொசுக்கள் வராமல் தடுக்க முடியும் என திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தெரிவித்தார். திருவள்ளூர் நகராட்சி சார்பில் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு, தடுப்பது குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்று வருகிறது. இதில் ஒரு அங்கமாக திருவள்ளூர் நகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு முகாம் நகராட்சி ஆணையர் விஸ்வநாதன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பொறியாளர் பாபு, சுகாதார அலுவலர் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நகராட்சி ஆணையர் விஸ்வநாதன் பேசும்போது, வீடுகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைப்பதில் மாணவர்களுக்கும் அதிக பங்கு உண்டு. மாணவர்களாகிய நீங்கள் வீடுகளில் கழிவு நீர் தேங்காத வகையிலும், பழைய மண் பாண்டங்கள், டயர்கள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்காமல் இருக்கவும் பெற்றோர்களிடம் முறையிட்டு வழி செய்ய வேண்டும். வீடுகளில் கொசுக்களை ஒழிக்க வேம்பு, நொச்சி ஆகிய இலைகளை ஒன்றாகச் சேர்த்து தீயிட்டு புகை போட்டால் இருக்கும் கொசுக்கள் அழிவதுடன், மேற்கொண்டு கொசுக்கள் வராமல் தடுக்க முடியும் என்றார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் மோகனசுந்தரி நன்றி கூறினார்.

**விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

பல்லடத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எம்.கே.ஆறுமுகம் தலைமை வகித்தார். ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சித் தலைவர் பழனிசாமி முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை அலுவலர் ஆன்டணி பால்ராஜ் வரவேற்றார். திருப்பூர் மாவட்டத் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சித்ராதேவி, தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், அரசின் வேளாண் திட்டங்கள் குறித்து விளக்கினர்.

இதில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பல்லடம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.பரமசிவத்திடம், வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்படும் நலத்திட்ட உதவிகள் வேண்டி விவசாயிகள் மனு அளித்தனர். இதில் 80-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பட்டுப் பூச்சி வளர்ப்பு விவசாயிகளை பாதுகாக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை**

பட்டுப் பூச்சி வளர்ப்பு விவசாயிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, அந்தக் கட்சியின் ஈரோடு மாவட்டச் செயலாளர் எஸ்.முத்துசாமி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

ஈரோடு மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்பு என்பது ஒரு பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. அண்மையில் பட்டுப்புழு கூட்டின் விலை கிலோ ரூ. 400 முதல் ரூ. 500 வரை விற்பனையாகி வந்தது. தற்போது ரூ. 250-க்கு மட்டுமே விற்பனையாகி வருகிறது. இதனால் பட்டுப்பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

மத்திய அரசு சீனாவில் இருந்து பட்டு இறக்குமதிக்கு 40 சதவீதம் இறக்குமதி வரி விதித்திருந்ததை படிப்படியாக 10 சதவீதமாக குறைந்துவிட்டது.

வெளிநாட்டு பட்டு குறைந்த விலைக்கு கிடைக்கும் நிலையில் உள்நாட்டு உற்பத்தியை விற்க முடியாத நிலை உள்ளது. இதனால் பட்டு நெசவு செய்யும் நெசவாளர்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர். எனவே, மத்திய, மாநில அரசுகள் பட்டுப் பூச்சி வளர்ப்பு விவசாயிகளை பாதுகாக்கவும், பட்டு நெசவு செய்யும் நெசவாளர்களை பாதுகாக்கவும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும் மானியம் கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பட்டுக்கூடு ஏல விற்பனை மையத்தை ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் நிறுவி, விவசாயிகள் கர்நாடகம் சென்று பட்டுக்கூடு விற்று வரும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல, கொப்பரை தேங்காய் விலை சமீபத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதுவரை கிலோ ரூ. 180-க்கு விற்ற கொப்பரை தற்போது ரூ. 65-ஆக குறைந்துவிட்டது.

இதேபோல கிலோ ரூ. 100-க்கு மேல் விற்ற எள் விலை தற்போது ரூ. 50-ஆக குறைந்துவிட்டது. எனவே, அரசு விவசாயிகளின் கருத்துகளைக் கேட்டறிந்து கொப்பரைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**பயிர்க்காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ரூ. 3.19 லட்சம் இழப்பீடு**

பவானியை அடுத்த சித்தோடு உழவர் பணி கூட்டுறவுச் சங்கத்தில் பயிர்க்காப்பீடு செய்த விவசாயிகளுக்கு, ரூ. 3.19 லட்சம் இழப்பீட்டுத் தொகை செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள், கரும்பு சாகுபடி செய்யப்பட்ட விளை நிலங்களில் நோய்த் தாக்குதல் உள்பட பல்வேறு காரணங்களால்

விளைச்சல் குறைந்து பாதிக்கப்பட்டது. இதனால், இச்சங்கத்தில் பயிர்க் காப்பீடு செய்திருந்த விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், இழப்பீடு மற்றும் புதிய மத்திய காலக் கடனுதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கு, சங்கத் தலைவர் ஆர்.முருகேசன் தலைமை வகித்தார். சித்தோடு பேரூராட்சித் தலைவர் இரா.வரதராஜன், பேரோடு சிற்றூராட்சித் தலைவர் பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு மாநகராட்சி துணை மேயர் கே.சி.பழனிசாமி, 37 விவசாயிகளுக்கு ரூ. 3.18 லட்சம் பயிர்க்கடன், 2 விவசாயிகளுக்கு ரூ. 72 ஆயிரம் மத்திய காலக் கடனுதவி வழங்கினார். இதில், சங்கச் செயலர் மு.ஈஸ்வரமூர்த்தி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நல்லசிவம், முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மானிய விலையில் தரமான பொருள்கள்: பட்டு விவசாயிகள் வலியுறுத்தல்**

மானிய விலையில் தரமான பொருள்களை வழங்க வேண்டும் என பட்டு விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கோபியில் பட்டு வளர்ச்சி விவசாயிகள் சங்கக் கூட்டம், அதன் தலைவர் சண்முகசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 84 அடி உள்ள நிலையில் முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும். இளம்புழுக்களைக் கொண்டு செல்வதற்கு போக்குவரத்து மானியம் கடந்த ஐந்து மாதங்களாக வழங்கப்படவில்லை. அதை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டு நூற்பாளர்கள், வியாபாரிகள், எளிதல் சென்று வர சத்தியமங்கலத்தில் அரசு பட்டுக்கூடு அங்காடி ஏற்படுத்த வேண்டும். பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் தரமான பொருள்களை வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், செயலாளர் குணசேகரன், பொருளாளர்

பாலசுப்பிரமணியம், துணைப் பொருளாளர் செல்வராஜ், மண்டல இணை இயக்குநர் ஜெயராஜ், உதவி இயக்குநர் ராஜமாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்: குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, கோட்டாட்சியர் உமா மகேஸ்வரி தலைமை வகித்தார். வட்டாட்சியர் ஆர்.முருகன், வட்ட வழங்கல் அலுவலர் சி.பன்னீர்செல்வம், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் ரவி, வேளாண் உதவி இயக்குநர்கள் அக்கண்டராவ், எஸ்.ஏழுமலை, அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது: திருவண்ணாமலை மாவட்ட தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் விவசாயிகளுக்கு பல கோடி ரூபாயை நிலுவைத் தொகையாக வைத்துள்ளன. இந்த நிலுவைத் தொகையை உடனே வழங்க மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவண்ணாமலையை அடுத்த வேடியப்பனூர், கவுத்திமலை, சொரகொளத்தூர் காட்டுப் பகுதிகளில் ஏராளமான மான்கள் உள்ளன.

இவை வறட்சியால் போதியக் குடிநீர் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றன. எனவே, வன விலங்குகளை பாதுகாக்க காட்டுப் பகுதிகளில் குடிநீர்த் தொட்டிகள், செக் டேம்களை அமைக்க வேண்டும்.

வனத்துறை மூலம் மரக்கன்றுகள் நடும் பணி நடைபெறுகிறது. இந்தப் பணியை ஜேசிபி இயந்திரத்தைக் கொண்டு செய்கின்றனர். இதைத் தவிர்த்து, விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு மரக்கன்றுகளை நட வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டம், விவசாயத்தை மட்டுமே நம்பி உள்ளது. சில வருடங்களாக, மாவட்டத்தில் வறட்சி அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

இதையடுத்துப் பேசிய கோட்டாட்சியர் உமா மகேஸ்வரி, விவசாயிகளின் அனைத்துக் கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டுத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கூட்டத்தின்போது இலவச வீட்டு மனைப் பட்டா, பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், மயானப் பாதை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை கோட்டாட்சியரிடம் விவசாயிகள் அளித்தனர்.

போளூர்: வட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.கூட்டத்துக்கு மாவட்ட விநியோக அலுவலர் எழிலன் தலைமை வகித்தார். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், விவசாயிகள் பேசியது: நகரில் பொதுமக்களுக்கு குடிநீர் சீராக விநியோகிப்பதில்லை. போளூர்- செங்குணம்- துரிஞ்சிக்குப்பம் வழியாக அரசுப் பேருந்து இயக்க வேண்டும். பெரிகரம் ஊராட்சியில் பழுதடைந்த பள்ளிக் கட்டடத்தை ஒன்றிய நிர்வாகம் இடிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு வேளாண் துறையில் சார்பில் ஆடிபட்ட விதைகள் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என விவசாயிகள் கூறினர்.

இதில் வட்டாட்சியர் கோபு, சமூக பாதுகாப்புத் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, வட்ட வழங்கல் அலுவலர் சுப்பிரமணியன், மண்டலத் துணை வட்டாட்சியர் குப்புசாமி, வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை, அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

செங்கம்: வட்டாட்சியர் தினகரன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

ஊராட்சியில் நூறு நாள் வேலை திட்டத்தில் பணி செய்வதற்கு ஆதார் அட்டை இருந்தால் மட்டுமே பணி வழங்கப்படுகிறது.

ஆனால், ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு மட்டும் எந்தவித அட்டையும் இல்லாமல் தினசரி வேலை வழங்கப்படுகிறது. இதனால், பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதை சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சிபுரம் கூட்டுச் சாலையில் இருந்து செய்யாறு மேம்பாலம் வரை ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளன.

இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். ஏரி கால்வாய், மதகுகளில் திருடுபோகும் இரும்பு பொருள்களைப் பாதுகாக்க பொதுப்பணித் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

கூட்டத்தில், சமூக பாதுகாப்பு வட்டாட்சியர் ஜெயப்பிரகாஷ், வட்ட வழங்கல் அலுவலர் பழனி, துணை வட்டாட்சியர்கள் ராஜராஜேஸ்வரி, நீதிச்செல்வன் உள்பட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.18 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தில், செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில் 390 மூட்டைகள் ரூ.18 லட்சத்துக்கு ஏலம் போயின.

இந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள், மஞ்சளை ஏலத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதில், தலா 65 கிலோ கொண்ட 390 மூட்டைகள் ஏலத்துக்கு வைக்கப்பட்டன. அதில், விரலி ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.8,839-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,230-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.7,369-க்கும், குறைந்தபட்சமாக ரூ.5,843-க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.12,612-க்கும், குறைந்தபட்சமாக ரூ.4,181-க்கும், ஏலம் போனது. மொத்தம் ரூ.18 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது.

**ஒட்டப்பட்டியில் உழவர் மன்றம் சார்பில் விழிப்புணர்வுக் கூட்டம்**

ஒட்டப்பட்டியில் உழவர் மன்றம் சார்பில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

உழவர் மன்ற அமைப்பாளர் வரதராஜன் வரவேற்றார். பட்டு வளர்ப்புக் குறித்து உதவி பட்டு ஆய்வாளர் கோவிந்தசாமி, பல்லவன் கிராம வங்கியின் சேவைகள் குறித்து பெத்தநாயக்கன்பாளையம் கிளை மேலாளர் சரண்ராஜ், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் தோட்டக்கலை உதவி அலுவலர் விஜயகுமார் விளக்கிப் பேசினார்கள்.

பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள் காதர்பாஷா, ரவிக்குமார், ஆவின்பால் கூட்டுறவு சங்கச் செயலர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். துணை அமைப்பாளர் குமரவேல் நன்றி கூறினார்.

**அரியலூர் மாவட்டத்தில் 2810 பயனாளிகளுக்கு ரூ. 17 கோடி பயிர்க் கடன்: மாவட்ட ஆட்சியர்**

அரியலூர் மாவட்டத்தில் இதுவரை 2810 பயனாளிகளுக்கு ரூ. 16 கோடியே 99 லட்சத்து 58 ஆயிரம் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் விவசாயிகளுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் முதலமைச்சரின் ஆணையின்படி, அரியலூர் மாவட்டத்தில் 2015-16 ஆம் ஆண்டுக்கான இலக்கு ரூ. 99 கோடியாகும்.

இக்கடனுதவியை வழங்குவதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை எய்திட கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரியலூரில் 57 பயனாளிகளுக்கு ரூ. 35.19 லட்சமும், திருமானூரில் 493 பயனாளிகளுக்கு ரூ. 276.61 லட்சமும், செந்துறையில் 185 பயனாளிகளுக்கு ரூ. 152.55 லட்சமும், ஜயங்கொண்டத்தில் 885 பயனாளிகளுக்கு ரூ. 526.74 லட்சமும், ஆண்டிமடத்தில் 228 பயனாளிகளுக்கு ரூ. 188.26 லட்சமும், தா.பழூரில் 962 பயனாளிகளுக்கு ரூ. 520.23 லட்சமும் என மொத்தம் 2810 பயனாளிகளுக்கு ரூ. 16 கோடியே 99 லட்சத்து 58 ஆயிரம் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தஞ்சையில் நாளை நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

தஞ்சாவூர்-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள புதிய ஆட்சியரகம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகே இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூலை 9-ம் தேதி

காலை 9 மணிக்கு, நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த ஒருநாள் பயிற்சி நடைபெறவுள்ளது. மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர் என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04362-204009, 98424-55833 என்ற எண்களிலோ தொடர்பு கொள்ளலாம்' என தஞ்சாவூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**ஆலத்தூரில் இலவச மண் பரிசோதனைமுகாம்: நாளை தொடங்குகிறது**

பட்டுக்கோட்டை வட்டம், ஆலத்தூர் அழகியநாதர் கோயில் அருகில் இலவச மண் பரிசோதனை முகாம் ஜூலை 9-ம் தேதி (வியாழன்) தொடங்கி 20-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தூத்துக்குடி ஸ்பிக் உர நிறுவனமும், ஆலத்தூர் உழவர் மன்றமும் இணைந்து இந்த முகாமை நடத்துகின்றன.

ஒவ்வொரு நாளும் காலை 10 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெறும் முகாமில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் அனைவரும் பங்கேற்று தங்கள் நிலத்திலுள்ள மண்ணை இலவசமாக பரிசோதனை செய்து கொள்ளலாம். காலையில் மண் மாதிரி கொடுத்தால் மாலையில் பரிசோதனை முடிவு அறிக்கை வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு, ஆலத்தூர் உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் வீ. அண்ணாதுரையை 94452 26113 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**காய்கறிப் பயிர்களில் மோனோ குரோட்டோபாஸ், மீத்தைல் பாரத்தியான் மருந்து பயன்படுத்த தடை**

திருநெல்வேலி மாவட்டத்தில் காய்கறிப் பயிர்களுக்கு மோனோ குரோட்டோபாஸ், மீத்தைல் பாரத்தியான் ஆகிய மருந்துகளைப் பயன்படுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் கூறியது:

தடை செய்யப்பட்ட பூச்சி மருந்துகளை சந்தையில் விற்பனை செய்வதோ, இருப்பு வைத்திருப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும். சிலவகை பூச்சிகொல்லி மருந்துகளை காய்கறிப் பயிர்களுக்கு மட்டும் பயன்படுத்தக் கூடாது என தடை உத்தரவு உள்ளது. ஆனால், இதே மருந்துகளை வேறு பயிர்களுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கும். இதன்படி, காய்கறிப் பயிர்களுக்கு மோனோகுரோட்டோபாஸ், மீத்தைல் பாரத்தியான் ஆகிய இரு பூச்சிகொல்லி மருந்துகளைப் பயன்படுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துகளை காய்கறிப் பயிர்களுக்கு பயன்படுத்துவதால் அவை நச்சுத் தன்மை அடைந்துவிடுகின்றன. நச்சுத் தன்மையுள்ள காய்கறிகளை அன்றாட உணவில் பயன்படுத்தினால் உடல் நலத்துக்கும் கேடு. எனவே, விவசாயிகள் இந்த மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம்.

மேலும், காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இந்த பூச்சிகொல்லி மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது. இந்தப் பூச்சிகொல்லி மருந்துகளை இதர பயிர்களுக்கு விற்பனை செய்யும்போது காய்கறிப் பயிர்களுக்கு பயன்படுத்தக் கூடாது எனப் பட்டியலில் குறிப்பிட்டிருக்க வேண்டும். இந்த எச்சரிக்கை அறிவிப்பு, பட்டியலில் இல்லாமல் விற்பனை செய்வது குற்றமாகக் கருதப்படும். விவசாயிகளும் இந்த பூச்சிகொல்லி மருந்துகளை காய்கறிகளுக்கு பயன்படுத்தக் கூடாது.

மேலும், மருந்துகளில் எச்சரிக்கைப் பட்டியல் இல்லாதவற்றை விவசாயிகள் வாங்கக் கூடாது எனவும் எச்சரித்துள்ளார் அவர்.

**உயிர் உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க யோசனை**

தென்னை உள்ளிட்ட பயிர்களுக்கு உயிர் உரங்களை இட்டு உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

இதுகுறித்து மேல்புறம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் தமிழ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தென்னை, ரப்பர் மரங்களுக்கு வேர் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா உயிர் உரம் இட்டு மகசூல் அதிகம் பெறலாம். ஆனி, ஆடி சாரல் மழையைப் பயன்படுத்தி ரப்பர், தென்னை மரங்களுக்கு ரசாயன உரத்துடன் தொழு உரம் இடும் பழக்கம் மேல்புறம் வட்டாரப் பகுதியில் உள்ளது. பாதை வசதி இல்லாத மலைகளில் உள்ள தோட்டங்களுக்கு அதிக எடை கொண்ட ரசாயன உரம் மற்றும் தொழு உரத்தை கொண்டு சேர்ப்பது மிகவும் கடினமான பணியாகும். அதிகமாக கூலி ஆள்கள் தேவைப்படுவதால் செலவும் அதிகமாகும். குறைந்த எடை கொண்ட உயிர் உரங்கள் மூலம் உரமிட்டால் அதிகச் செலவை தவிர்க்கலாம். பயிருக்குத் தேவையான தழைச் சத்தை அசோஸ்பைரில்லம் மூலமாகவும், மணிச்சத்தை பாஸ்போபாக்டீரியா என்னும் உயிர் உரமாகவும் இடலாம்.

அசோஸ்பைரில்லம் உயிர் உரம், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து மண்ணில் சேர்ப்பதுடன் பயிர் ஊக்கிகளை வெளியிட்டு பயிர் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும்.

உயிர் உரங்கள் இடப்பட்ட பயிர்கள் அதிக வேர் கிளைகளுடன் வளர்ந்து அதிகப்படியான நீர் மற்றும் உரச்சத்தை பயிர் கிரகிக்கச் செய்யும். இதனால் பயிர் வளர்ச்சி அதிகரிக்கும்.

ரசாயன உரங்கள் இடுவதால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதுடன் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் இயக்கத்தையும் தடுத்துவிடும். எனவே உயிர் உரங்கள் மூலம் மரப்பயிர்களுக்கு உரமிடுவது சிறந்தது. மரம் ஒன்றிற்கு 50 மில்லி அசோஸ்பைரில்லம் மற்றும் 50 மில்லி பாஸ்போபாக்டீரியா உரத்தை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து ஒரு வார காலம் நிழலில் வைத்திருந்து இடவேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான உயிர் உரங்கள் மேல்புறம் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனை வாங்கி பயன்பெற விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மண் இல்லாமல் பசுந்தீவனம் உற்பத்தி: சாதிக்கும் பெண் விவசாயி**



மண் இல்லாமல் விவசாயமே இல்லை. ஆனால் தேனி மாவட்டம், போடி அருகே சில்லமரத்துப்பட்டியை சேர்ந்த பெண் விவசாயி வி.மணிமாலா,

மண் இல்லாமல் தீவன வளர்ப்பு என்ற நவீன முறையில் ஆடு, மாடுகளுக்கான தீவனங்களை விளைவித்து வருகிறார். நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் விவசாய ஆர்வலர்கள் வந்து இவரது தீவனவளர்ப்பு கூடத்தை பார்வையிட்டு செல்கின்றனர். இவரது மாட்டுக்கொட்டகையில் 10 அடி நீளம், 8 அடி அகலம் கொண்ட ஒரு அறை உள்ளது. இந்த அறையின் மேல் பகுதி பச்சைவலையால் மூடப்பட்டுள்ளது. அறைக்குள் வெளிச்சம் வரும் வகையில் பாலிதீன் ஷீட்டால் பக்கவாட்டு பகுதிகள் மூடப்பட்டுள்ளது. அறைக்குள் சிறிதளவு மட்டும் வெளிச்சம் வருகிறது. தரையின் அடித்தளத்தில் முக்கால் அடி உயரத்திற்கு மணல் பரப்பி உள்ளார். ஒரு அடி நீளம், ஒன்றரை அடி அகலம், 3 இன்ச் உயரம் கொண்ட 60 "பிளாஸ்டிக் டிரே' களை வைக்கும் அளவிற்கு "ரேக்' அமைத்துள்ளார். இந்த டிரேக்களின் அடிப்பகுதியில் மிகச்சிறிய அளவிலான 12 துவாரங்கள் உள்ளன. டிரேக்களில் தெளிக்கப்படும் தண்ணீர் வெளியேற இந்த ஏற்பாடு. ஒரு மணி நேரத்திற்கு இரண்டு நிமிடம் வீதம் 60 டிரேக்களிலும் தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் தானியங்கி சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. அறைக்குள் 25 டிகிரி செல்சியஸ் வெப்பம் காக்கப்படுகிறது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவீதம் இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு டிரேயிலும் 350 கிராம் விதைகளை போடவேண்டும். இதற்கு முன் 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து, அதனை ஈரத்துணியில் 24 மணி நேரம் கட்டி வைக்கவேண்டும். இந்த விதைகள் ஒரு வாரத்தில் 15 செ.மீ., உயரம் வளர்ந்து விடுகிறது. வேர்கள் அடிப்பகுதியில் பின்னிப்பிணைந்து வெள்ளை மெத்தை போல் அழகாக காணப்படுகிறது. இந்த முறையில் மட்டுமே விதை, இலை, வேருடன் எடுத்து ஆடு, மாடுகளுக்கு கொடுக்கலாம். இம்முறையில் மக்காச்சோளம், சோளம், கோதுமை, பார்லி விதைகள் வளர்க்கப்படுகின்றன. பசுக்கள், ஆடுகள் வளர்ப்பவர்கள் பசுமை கூடாரம் (பாலி ஹவுஸ்) அமைத்தும்

வளர்க்கலாம்.

விவசாயி வி.மணிமாலா கூறியதாவது: சராசரியாக மண்ணில் ஒரு கிலோ பச்சை புல் விளைவிக்க பல நாட்கள் காத்திருக்க வேண்டும். பல நூறு லிட்டர் தண்ணீர் செலவிட வேண்டும். நான் பயன்படுத்தும் மண் இல்லா மாட்டுத்தீவன வளர்ப்பு முறையில் தினமும் 20 லிட்டர் தண்ணீர் மட்டுமே பயன்படுத்துகிறேன். பூச்சிகொல்லிகள், ரசாயன உப்புக்கள், களைக்கொல்லிகள் பயன்படுத்துவதில்லை. தினமும் 30 கிலோ விளைச்சல் எடுக்கிறேன். ஒரு கிலோ விதையில் ஏழே நாளில் 8 கிலோ அறுவடை செய்கிறேன். இந்த முறையின் மூலம் ஆண்டு முழுவதும் சீரான பசுந்தீவனம் கால்நடைகளுக்கு தரலாம். மக்காச்சோளத்தை மாவாக்கி போடுவதை விட முளைக்க வைத்து போடுவது மேலானது. இதன் மூலம் வைட்டமின், மினரல், என்சைம்கள் அதிகரிக்கும். முளைகட்டிய இந்த தீவனத்தில் சாதாரணமாக விளையும் தீவனத்தை விட பல மடங்கு அதிக சத்துக்கள் உள்ளது. இதனால் மாடு, ஆடுகள் நல்ல ஊக்கத்துடன் வளர்கின்றன, என்றார். மேலும் அறிய 70921 33002.

**- பாண்டியராஜன், தேனி.**

**தமிழ்நாடு அரசின் காய்கறி மகத்துவ மையம்**



இன்று தமிழ்நாடு அரசு வேளாண்மை செய்வோருக்கும், அது சார்ந்த துறையினருக்கும் அரசு தரும் சேவைகளை மக்கள் அறிவர். மத்திய அரசும், வானகம், ஸ்பிக் - விவசாய அறக்கட்டளை, நபார்டு, பல்கலைக்கழகம், எம்.எஸ்.சுவாமிநாதன் அறக்கட்டளைகளும் செய்து வரும் சேவைகளைப் பயன்படுத்தினாலே விவசாயிகள் இஸ்ரேல் போல் சீனா போல் முன்னேறிவிட முடியும். அதில் ஒரு மைல் கல் தான் ""காய்கறி மகத்துவ மையம்" ஆகும். இது காய்கறிகள் அதிகம் விளையும் திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத்துறை இதை உருவாக்கி வருகின்றது. இங்கு தக்காளி, மிளகாய், கத்தரி போன்ற பயிர்களில் உயர் விளைச்சல் எடுக்கக் கூடிய துல்லிய தொழில்நுட்பங்களை இப்பண்ணையில் அறிமுகப்படுத்தி நேரடி செயல் விளக்கமாக விவசாயிகளுக்கு நிரூபித்து காட்டி பயிற்சி தருகின்றனர். விவசாயிகளுக்கு ஆலோசனை விற்பனை உத்திகள் கற்றுத் தருகின்றனர். விற்பனைக் கூடமும், குளிர்சாதன கோடவுனும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நிறுவன திட்ட அலுவலர் தங்கள் மைய ஆலோசனைகளாக காய்கறிகள் பயிரிடும் விவசாயிகளுக்கு அளித்தவை :

ஹைடெக் என்று கூறும் நவீன கால விவசாயத்தில் சிறந்த நிலம், நல்ல உரம், போட்டு விவசாயம் செய்யும் பொழுது காய்கறிகளைப் பொறுத்தவரை ஹைபிரிட் விதைகளைப் பயன்படுத்த வேண்டும். அப்பொழுது தான் நல்ல விளைச்சல் பெறலாம். கண்டிப்பாக சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து, நீரில் உரத்தை கரைத்து, சொட்டுநீர் மூலம் சரியான அளவு (குறைத்தோ, அதிகமாகவோ கொடுக்க கூடாது) கொடுக்க வேண்டும். மூடாக்கு அமைத்து பயிர் செய்தால் மண் அதிகம் சூடாகாது. களைகள் முளைக்காது. நீர் ஆவியாகாமல் தடுக்கப்பட்டு ""மைக்ரோ கிளைமேட்" எனும் துல்லிய, சரியான சீதோஷ்ணம் இருக்கும். இதனால் வேர்த் தொகுதியில் ஆரோக்கியமான சத்துக்களை

உடனே இழுத்துக் கொள்ளும் திறன் கொண்ட வெள்ளை நிற சல்லி வேர்கள் உண்டாகி, விளைச்சல் அதிகரிக்கும். இதுபோன்ற ஏராளமான ஆலோசனைகளைப் பெற்று இப்பகுதி மக்கள் குறிப்பாக காய்கறி பயிரிடுவோர் பயன்பெற வேண்டும்.

**- சீனிவாசன், திட்ட அலுவலர், ரெட்டியார்சத்திரம்.**

**நவீன தொழில்நுட்பம்**



சிறுதானியங்கள் சாகுபடி : தினை, சாமை, வரகு, பனிவரகு மற்றும் குதிரைவாலி ஆகியவை சிறு தானியங்கள் எனப்படும். 1960 ஆண்டின் கணக்கின்படி சிறு தானியங்கள் 5.03 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டன. ஆனால் தற்போது அதன் பரப்பளவு 0.30 எக்டராக குறைந்துள்ளது. இதனால் சிறு தானியங்களை மக்கள் உட்கொள்ளும் அளவு குறைந்து கொண்டே வருவதால் ஊட்டச்சத்து குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன.

சிறுதானிய பயிர்கள் வெப்பம் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரும் பயிராகும். குறைந்த அளவு பராமரிப்பே தேவைப்படுகிறது. குறைந்த வளம் உள்ள மண்ணிலும் வளரும் தன்மை கொண்டது. களர், உவர் நிலங்களிலும் வளரக்கூடியது. இப்பயிரின் உற்பத்திக்கு செயற்கை உரங்கள் இடத்தேவையில்லை. விவசாயிகள் பெரும்பாலும் இயற்கை மற்றும் நுண்ணுயிர் ஊட்டச்சத்து உரங்களே பயன்படுத்துகின்றனர். பூச்சி, நோய் தாக்குதல் குறைவாகவே உள்ளது. சிறுதானியங்கள்

ஊட்டச்சத்து நிறைந்த ஒரு உணவுப் பயிராகும். சில காலத்திற்கு முன் சிறுதானிய சாகுபடியில் வழக்கமான சாகுபடி முறையை பின்பற்றியதால் ஒரு எக்டருக்கு 4-5 குவிண்டால் விளைச்சல் மட்டுமே கிடைத்தது. தற்போதுள்ள புதிய சாகுபடி முறைகள் மற்றும் தரமான அதிக விளைச்சல் தரும். இரகங்களை பயன்படுத்தி ஒரு எக்டருக்கு 8 குவிண்டால் வரை பெறமுடியும். மேலும் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மதிப்புக்கூட்டப்பட்ட சிறு தானியங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

சாகுபடி நுட்பங்கள் :

தினை : மானாவாரி - ஜூன் - ஜூலை - கோ.5, செப்டம்பர் - அக்டோபர் - கோ.3, இறவை - பிப்ரவரி - மார்ச் கோ.4, செப்டம்பர் - அக்டோபர் கோ.5, கோ.1

சாமை : ஜூன் - ஜூலை கோ.2, ஜூலை - ஆகஸ்ட் கோ.2, பையூர்.1, செப்டம்பர் - அக்டோபர் கோ.1, கோ.3

வரகு : மானாவாரி ஜூன் - ஜூலை கே.1, ஜூலை - ஆகஸ்டு ஏ.பி.கே.1, கோ.3,

வம்பன் 1

பனிவரகு : மானாவாரி கே.1, செப்டம்பர் - அக்டோபர் கோ.2, கோ.3, கோ.4, இறவை : பிப்ரவரி - மார்ச் கே.1

குதிரைவாலி : மானாவாரி செப்டம்பர் - அக்டோபர் கோ.1, இறவை : பிப்ரவரி - மார்ச் கோ.1

விதை அளவு : வரிசை நடவுக்கு 10 கிலோ / எக்டர், விதைக்கருவி மூலம் விதைகள் 12.5 கிலோ / எக்டர்

இடைவெளி : வரிசை நடவுக்கு 22x10 செ.மீ. இரு செடிகளுக்கு இடையே இடைவெளி 10 செ.மீ.

உரமிடுதல் : தொழு உரம் 12.5 டன் /எக்டர், தழைச்சத்து : 44 கிலோ / எக்டர், மணிச்சத்து : 22கிலோ/ எக்டர்

களையெடுத்தல் : முதல் களை 15 நாட்களில் எடுக்கப்படுகிறது. இரண்டாவது களை 40 நாட்களில் எடுக்கப்படுகிறது. சிறுதானியங்களின் அரிசி கிலோ ரூ.75 - 100 வரை விற்கப்படுகிறது. சிறுதானியங்களை விட சிறுதானிய அரிசியாக விற்கும் போது விவசாயிகள் அதிகம் லாபம் பெறலாம். மேலும் விபரங்களுக்கு பயிர் மேலாண்மை இயக்ககம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. அலைபேசி : 99441 62314.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## 'கோ.ஆர். - 51' புதிய நெல் ரகம்!




கோவை:கோவை வேளாண் பல்கலை உருவாக்கிய, 'கோ.ஆர். - 51' எனும், புதிய நெல் ரகத்திற்கு, மத்திய அரசு, அங்கீகாரம் வழங்கி உள்ளது. இந்த வகை நெல்லை, அனைத்து பருவத்திலும் பயிரிடலாம் என்பதால், விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு, கோ.ஆர். - 51 என்ற புதிய நெல் ரக விதையை, பல்கலை உருவாக்கியது. இந்த விதை, முதலில், மாநில ஆராய்ச்சி கழகத்தின் சார்பில், ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது; பின், மத்திய ஆராய்ச்சி கழக

ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. ஜனவரியில், 'இந்த விதை ரகம் தரமானது' என, மத்திய அரசு அங்கீகாரம் அளித்தது. இதையடுத்து, தமிழகம் உள்ளிட்ட, அனைத்து மாநிலங்களிலும், புதிய ரக நெல் விதை விற்பனை துவங்கி உள்ளது. பல்கலையின் விதை மைய தனி அலுவலர் பாஸ்கரன் கூறுகையில், "புதிய ரக நெல், அனைத்து பருவங்களுக்கும் ஏற்றது என்பதால் விவசாயிகள் மத்தியில், அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. விதையை பயிரிடுவதற்கான செய்முறை குறிப்புகளும், விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன," என்றார்.

தனி சிறப்பு!

- புதிய நெல் ரகம், 105 நாட்களில் வளர்ந்து விடும்.
- பூச்சி, நோய்களின் தாக்கத்தை எதிர்த்து வளர்ந்து, அதிக விளைச்சலை தரக் கூடியது; நேரடி நெல் விதைப்பில் பயிரிடக் கூடியது.
- இதனால், இந்த ரக விதை நெல்லை வாங்குவதில், விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஊழலும், மரணமும்சந்தேகக் கோடுகள்!

அரசுப் பணிக்கு ஆள் எடுக்கும், தொழில் தேர்வு வாரியம் மேற்கொண்ட தேர்வில் நடைபெற்ற ஊழல்கள், ம.பி., அரசுக்கு சாதகமானதல்ல. 'வியாபம்' என்ற அந்த விசேஷ அமைப்பின் முறைகேடுகளில், மாநில கவர்னர், அமைச்சர்கள், பல்வேறு துறை அதிகாரிகள் தொடர்பு இருக்கிறது என்ற சந்தேகத்தை, அடுத்தடுத்த மரணங்கள் எழுப்பி விட்டன.

நுழைவுத் தேர்வு மற்றும் பணியாளர் தேர்வில், கடந்த நான்கு ஆண்டுகளாக ஊழல் நடந்தவிதம் பற்றி, சிறப்பு புலனாய்வுக் குழுவானது, ஐகோர்ட் உத்தரவின்படி விசாரணை நடத்துவதாக கூறினாலும், மர்மச்

சாவுகள் இன்று இந்த விவகாரத்தை, உச்சத்திற்கு இட்டுச் சென்றுள்ளன. இந்த விவகாரத்தில், இதுவரை 2,500 பேர் கைதாகி உள்ளனர் என்பதும் முக்கிய தகவலாகும்.

ம.பி.,யில், அசைக்க முடியாத பலத்துடன் தேர்தல் வெற்றிகளை குவிக்கும் முதல்வர் சிவராஜ் சிங் சவுகானோ, 'ஐகோர்ட் அறிவுறுத்தலில் விசாரணை நடப்பதால், நேரடியாக சி.பி.ஐ., விசாரிக்க அரசு வலியுறுத்த தேவையில்லை' என்ற கருத்தை தெரிவித்தார். உடனே 24 மணிேநரத்தில் 'சி.பி.ஐ., விசாரணைக்கு அவர் ஆதரவளித்தது, இவ்விஷயத்தில் முன்னாள் முதல்வர் உமாபாரதி தெரிவித்த அச்சம், அவர் மனதைப் பாதித்திருக்கிறது போலும்.

ஆனால், இந்த விஷயத்தை ஆராயப்புகுந்த இளம் நிருபர் ஒருவர் மரணம், அடுத்ததாக ஜபல்பூர் மருத்துவக் கல்லுாரி தலைவர் மரணம் ஆகியவை, இந்த விவகாரத்தில் சந்தேகத்தை அதிகரித்துள்ளன.

மத்திய நிதியமைச்சர் ஜெட்லி, 'வியாபம்' தொடர்பான புகார்கள், நியாயமாக விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறியது கருத்து வலுப்பெற்று வருகிறது. இவ்விஷயத்தில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறும்போது, 'ஐகோர்ட் அல்லது சுப்ரீம் கோர்ட் தெரிவிக்கும் பட்சத்தில், சி.பி.ஐ., விசாரிக்க உத்தரவிடலாம்' என்று கூறியது மக்கள் விருப்பத்தை எதிரொலிக்கவில்லை.

அரசுப் பணிகள், மருத்துவக் கல்லுாரிகளில் ஆள்சேர்ப்பு நடந்ததில் ஊழல் எனில், மாநில அரசுப் பணிகளில் இந்த நபர்கள் சேரும்போது, இவர்கள் செயல், சமூக அக்கறையுடன் இருக்குமா என்பது சந்தேகமே.

இந்த மோசடியில், காங்கிரஸ், - பா.ஜ., என்ற கட்சி வேறுபாடு இன்றி, அமைச்சர்கள், பல்வேறு மட்டத்தில் உள்ள உயர் அதிகாரிகள் பெயர்கள் அடிபடுவது, இப்பிரச்னையை அதிகமாக பேச வைத்திருக்கிறது. அதில் கவர்னர் ராம்நரேஷ் தொடர்பும் இருப்பதாக புகார் உள்ளதால், அப்பதவியின் கண்ணியத்தை அவர் குறைத்து விட்டாரோ என்று, சந்தேகிக்க வைக்கிறது. இதுவரை, இறந்தவர்கள் எண்ணிக்கை, இந்த விசாரணை முடிவில் தான் உறுதியாகும் என்றாலும், பத்திரிகை நிருபர் அக் ஷய் சிங் அகால மரணம், அதிக சர்ச்சையை கிளப்பி உள்ளது.

கவர்னரை நீக்க கோரும் மனு, தற்போது சுப்ரீம் கோர்ட் முன் இருப்பதால், விரைவில் இந்த விசாரணை குறித்து, உருப்படியான முடிவுகளை எடுக்க உதவும். அது தேர்வு அல்லது நியமன அமைப்புகளை அரசு உருவாக்க, சில வழிகாட்டி குறிப்புகளை தந்து, ஊழலை குறைக்க உதவலாம்.

## பயிர் கடன் கிடைக்கவில்லை:5 லட்சம் விவசாயிகள் அவதி

கூட்டுறவு சங்கங்களில், பயிர் கடன் கிடைக்காததால், தமிழகம் முழுவதும், ஐந்து லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். தமிழகத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஜூனில், குறுவை சாகுபடியும்; அக்டோபரில், சம்பா சாகுபடியும் நடக்கும். இதற்கு தேவையான கடன் பெற, கூட்டுறவு சங்கங்களையே விவசாயிகள் பெரிதும் நம்பி உள்ளனர். 2013ல் ஏற்பட்ட வறட்சியால், பல விவசாயிகளால், வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியவில்லை. இந்நிலையில், இந்த ஆண்டு, குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்காக, கூட்டுறவு சங்கங்களில் கடன் கேட்டு, ஐந்து லட்சம் விவசாயிகள் விண்ணப்பித்து உள்ளனர். ஆனால், 2013ல் வாங்கிய கடனை, திரும்ப செலுத்தாததை காரணம் காட்டி, புதிய கடன் வழங்க, வங்கிகள் மறுக்கின்றன. வாங்கிய கடனை, 13 சதவீத

வட்டியுடன் உடனே செலுத்த வேண்டும் என்றும், நிர்பந்தம் செய்து வருகின்றன.

இதுகுறித்து, டெல்டா மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பு, நிர்வாகி ஒருவர் கூறியதாவது: நடப்பு ஆண்டு பட்ஜெட்டில், '5,500 கோடி ரூபாய் அளவுக்கு, கூட்டுறவு அமைப்புகள் மூலம், பயிர் கடன் வழங்கப்படும். கடனை முறையாக செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டியில்லாமல் கடன் வழங்கப்படும். வட்டி மானியம் வழங்க, 200 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கப்படும்' என, அரசு அறிவித்தது. ஆனாலும், பயிர் கடன் இன்னும் விவசாயிகளை சென்று சேரவில்லை.

இவ்வாறு, அவர் கூறினார்.-- நமது நிருபர் --

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 84.39 அடி

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 84.39 அடியாகவும், நீர்இருப்பு 46.47 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையின் நீர்வரத்து விநாடிக்கு 4,310 கனஅடியிலிருந்து 3,454 கனஅடியாக குறைந்தது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக, 1000 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பொள்ளாச்சி சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரிப்பு காங்கயம் காளை ரூ.40 ஆயிரத்துக்கு விற்பனை**



பொள்ளாச்சி சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்து இருந்தது. காங்கயம் காளை ரூ.40 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. மாட்டு சந்தை பொள்ளாச்சியில் மாட்டு சந்தை வாரத்தில் வியாழக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய 2 நாட்கள் நடைபெறுவது வழக்கம். சந்தைக்கு ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இங்கு வரும் மாடுகளை உள்ளூர் விவசாயி கள், வியாபாரிகளும் வாங்கி செல்கின்றனர். இது தவிர கேரளாவுக்கும் மாடுகள் கொண்டு செல்லப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை என்பதால் மாட்டு சந்தை நடைபெற்றது. சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்து காணப்பட்டது. 2 ஆயிரம் மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. அதிகபட்சமாக காங்கயம் காளை ரூ.35 ஆயிரத்தில் இருந்து ரூ.40 ஆயிரம் வரை விற்பனை ஆனது. ரம்ஜான் பண்டிகை

இது குறித்து மாட்டு சந்தை வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

பொள்ளாச்சி சந்தைக்கு இன்று (நேற்று) 2 ஆயிரம் மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. கடந்த வாரத்தை விட இந்த வாரம் 500 மாடுகள் கூடுதலாக வந்தன. இதில் காங்கயம் காளை ரூ.35 ஆயிரத்தில் இருந்து ரூ.40 ஆயிரம் வரையும், காங்கயம் மற்றும் ஜெர்சி பசுக்கள் ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரம் வரையும், நாட்டு எருமை ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரம் வரையும். மொராய் எருமை ரூ.30 ஆயிரத்தில் இருந்து ரூ.35 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது.

வழக்கமாக ரம்ஜான் பண்டிகையையொட்டி மாடுகள் வரத்து அதிகமாக இருக்கும். ஆனால் ஒரு சில அமைப்புகளை சேர்ந்தவர்கள் மாடுகளை பிடித்து கோசாலையில் ஒப்படைப்பதால், வியாபாரிகள் மாடுகளை சந்தைக்கு கொண்டு வருவதில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

**நீடாமங்கலத்தில் இருந்து தர்மபுரிக்கு அரவை பணிக்காக 1000 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**




நீடாமங்கலத்தில் இருந்து நேற்று தர்மபுரிக்கு அரவை பணிக்காக 1000 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.
நெல் அரவை பணி
வெளி மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலைகளில் அரவை செய்வதற்காக திருவாரூர் மாவட்டத்தில் இருந்து நெல் அனுப்பும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நேற்று நீடா மங்கலத்தில் இருந்து தர்ம புரிக்கு அரவை பணிக்காக 1000 டன் நெல் அனுப்பும் பணி நேற்று நடைபெற்றது. இதையொட்டி நீடாமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங் களில் கொள்முதல் செய் யப் பட்ட நெல் மற்றும் பாமணி மத்திய சேமிப்பு கிடங்கு, திறந்த வெளி சேமிப்பு மையங் கள் ஆகியவற்றில் இருந்து 87 லாரிகளில் சன்ன ரக நெல் நீடாமங்கலம் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப் பட்டது.

1000 டன் நெல் இதைதொடர்ந்து சுமை தூக்கும் பணியாளர்கள் சரக்கு ரெயிலின் 29 பெட்டிகளில் நெல் மூட்டைகளை அடுக்கி வைத்தனர். பின்னர் 1000 டன் நெல் மூட்டைகளுடன் சரக்கு ரெயில் தர்மபுரிக்கு புறப்பட்டு சென்றது.

தினகரன்

**வேளாண் பல்கலையில் கலந்தாய்வு நிறைவு**




கோவை: கோவை தமிழ்நாடு பல்கலைக்கழகத்தில் பொதுப்பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு கடந்த 29ம் தேதி துவங்கியது. இதில் வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் 5 உறுப்பு கல்லூரியின்கீழ் உள்ள 1,421 இடங்களுக்கு கலந்தாய்வு நடந்தது. 3,504 பேர் அழைக்கப்பட்டனர். 1654 பேர் கலந்து கொண்டனர். 1,130 பேர் சேர்க்கப்பட்டனர். இந்நிலையில், எஸ்சி உள்ளிட்ட பிரிவினருக்கான கலந்தாய்வு நேற்று நடந்தது. 415 பேர் அழைக்கப்பட்டனர். 273 பேர்

பங்கேற்றனர். 193 பேர் சேர்க்கப்பட்டனர். முதல்கட்ட கலந்தாய்வில் மட்டும் 1,323 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 138 இடங்கள் காலி என அறிவிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலை கிலோ ரூ.7 முதல் 8.50 வரை நிர்ணயம்**

மஞ்சூர், : நீலகிரி மாவட்டத்தில் சுமார் 65 ஆயிரம் விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் மஞ்சூர், பிக்கட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, மேற்குநாடு, மகாலிங்கா, கைகாட்டி, இத்தலார், கரும்பாலம், கட்டபெட்டு, எப்பநாடு, பிரான்டியர், பிதர்காடு, சாலீஸ்பரி மற்றும் பந்தலூார் ஆகிய 15 கூட்டுறவு ஆலைகளும் நுாற்றுக்கும் மேற்பட்ட தனியார் ஆலைகளும் இயங்கி வருகின்றன. இதில் கூட்டுறவு ஆலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரம் சிறு,குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.இவர்களிடம் இருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒரு முறை குன்னுாரில் உள்ள இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

பின்னர் சம்பந்தபட்ட கூட்டுறவு ஆலைகள் மூலம் விவசாயிகளுக்கு அவர்கள் விநியோகித்த பசுந் தேயிலைக்கேற்ப தொகை பட்டுவாடா செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் விவசாய உறுப்பினர்களிடம் இருந்து கூட்டுறவு ஆலைகளில் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கூட்டம் குன்னுாரில் உள்ள இண்ட்கோசர்வ் அலுவலகத்தில் நடைபெற்றது. இண்ட்கோசர்வ் அதிகாரிகள், அனைத்து கூட்டுறவு தொழிற்சாலைகளின் தனி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். இந்த கூட்டத்தில் பசுந்தேயிலைக்கான மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. இதன்படி மஞ்சூர், கைகாட்டி, சாலீஸ்பரி, பந்தலுார் தொழிற்சாலைகளில்

பசுந்தேயிலைக்கு மாத விலையாக கிலோவிற்கு ரூ.6.50 மற்றும் கூடுதல் விலை ரூ.2 சேர்த்து ரூ.8.50 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. பிரான்டியர் மற்றும் பிதர்காடு தொழிற்சாலைகளில் கிலோவிற்கு ரூ.6 மற்றும் கூடுதல் விலை ரூ. சேர்த்து ரூ.2 ஆகவும், பிக்கட்டி, குந்தா(எடக்காடு), மகாலிங்கா, கரும்பாலம், கிண்ணக்கொரை ஆகிய தொழிற்சாலைகளில் கிலோ ஒன்றுக்கு ரூ.5.50 மற்றும் கூடுதல் விலை 2 ரூபாய் சேர்த்து ரூ.7.50 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்குநாடு, இத்தலார், எப்பநாடு உள்ளிட்ட தொழிற்சாலைகளில் கிலோவிற்கு ரூ.5 மற்றும் கூடுதல் விலை ரூ. 2 சேர்த்து ரூ.7 ஆகவும் மாதவிலை அறிவிக்கப்பட்டது. கடந்த சில மாதங்களாகவே கூட்டுறவு தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் விலை படிப்படியாக குறைந்து வருகிறது. அரசு தரப்பில் வழங்கப்படும் இரண்டு ரூபாய் சேர்த்தும் தேயிலையின் விலை கிலோ ஒன்றுக்கு பத்து ரூபாய்கும் குறைவாகவே உள்ளது தேயிலை விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**வாழைத்தார் ஒழுங்குமுறை கூடத்தில் பதிவேட்டில் முதல் கைகொப்பமிடும் விவசாயிக்கு ஏலத்தில் முன்னுரிமை விழிப்புணர்வு கூட்டத்தில் தகவல்**

தொட்டியம், : காட்டுப்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் முதலில் வந்து கையொப்பமிடும் வியாபாரிக்கு வாழைத்தார் ஏலம் எடுக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று விழிப்புணர்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.தொட்டியம் தாலுகா காட்டுப்புத்தூர் சீலைப்பிள்ளையார்புத்தூர் சாலையில் திங்கட்கிழமைதோறும் செயல்படும் அரசு வாழைத்தார் ஒழுங்குமுறை விற்பனை கூடம் இயங்கி வருகிறது. இவ்வளாகத்தில் விவசாயிகள், வியாபாரிகள் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர் வீரக்குமார் தலைமை வகித்தார். கள கண்காணிப்பாளர் ரெங்கராஜ், அலுவலக உதவியாளர்கள் தங்கராஜ், கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஏலத்திற்கு வாழைத் தார் கொண்டுவரும் விவசாயிகளுக்கு வாழைத்தார்களை விற்பனை கூடத்திற்கு கொண்டுவரும் முன் இடம் பிடிப்பதை தவிர்க்க வேண்டும். பகல் 12 மணிக்குள் ஏலத்திற்கு தார்களை கொண்டுவர வேண்டும். 4 அல்லது 5 தார்கள் கொண்ட கட்டுகளாக கட்டவேண்டும். ஏலத்திற்கு விடப்படும் தார்களில் நம்பர் பதிந்தவுடன் உடனிருந்து டோக்கன்கள் பெற்றுச் செல்ல வேண்டும். டோக்கன் காணாமல்போனால் உடனடியாக விற்பனை கூட அதிகாரிகளிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். வாழைத்தார்களுக்கு போதிய விலை கிடைக்காத பட்சத்தில் வாபஸ் பெற்றுக் கொள்ளவும் விவசாயிகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

அதேபோல் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வாழைத்தார் ஏலம் எடுக்க வரும் வியாபாரிகள் பகல் 1 மணிக்குள் விற்பனை கூடத்திற்கு வந்துவிட வேண்டும். வருகை பதிவேட்டில் முதலில் கையொப்பமிடும் வியாபாரிக்கு ஏலம் எடுக்க முன்னுரிமை அளிக்கப்படும். ஏலம் எடுக்கும் வாழைத்தார் உரிமையாளர்களுக்கு அன்றே பணம் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.கூட்டத்தில், காரமங்கலம் அம்மாசி, மோகனூர் ராமராஜ், இளம்பிள்ளை வசந்தி, கோபிச்செட்டிபாளையம் ஜியாவுதின், கொண்டலாம்பட்டி குமார், சேலம் ஆறுமுகம் உள்பட வாழைத்தார் ஏலம் எடுக்கும் வியாபாரிகள் மற்றும் காட்டுப்புத்தூர் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.முன்னதாக நேற்றுமுன்தினம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு ஏலத்திற்கு 1109 தார்கள் ஏலத்திற்கு வந்தன. இதில் அதிகபட்சமாக பூவன் தலா ரூ.340க்கும், ரஸ்தாளி ரூ.330க்கும், கற்பூரவள்ளி ரூ.340க்கும், மொந்தன் ரூ.170க்கும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 38 ஆயிரத்து 100க்கு ஏலம் போனது.

**தரமான கம்பு உற்பத்தி முறைகள்: வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : கம்பு இறவையாகவும், மானாவாரியாகவும் எல்லா வகை நிலங்களிலும் பயிரிட ஏற்றவை. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 கொண்ட நிலங்கள் சிறந்தவை ஆகும். மானாவாரியில் பயிரிட ஜூலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களும், இறவைக்கு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் ஏற்றவை ஆகும். கே.எம்.2, கோ.(சியு).9இ, ஐசிஎம்வி.221 ஏற்ற ரகங்கள் ஆகும். மானாவாரியாக இருந்தால் எக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். இறவையாக இருந்தால் எக்டேருக்கு 3.75 கிலோ தேவைப்படும். வறட்சியை தாங்கி வளர பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமை 1 லிட்டர் நீர் கலந்து கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊற வைத்து பின்பு நிழலில் உலர்த்தி தன் எடைக்கு உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். 50% தழைச்சத்து உரத்தை நட்ட 15வது நாள் மற்றும் 30வது நாள் பிரித்து மேலுரமாக இடவேண்டும். விதைத்தவுடன் 4வது நாளும் பின்னர் 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை மற்றும் காலநிலைக்கு தகுந்தவாறு நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 15 மற்றும் 30ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் பொருளாதார சேதார நிலை அறிந்து வேளாண்துறை அலுவலர் ஆலோசனையின்படி பயிர் பாதுகாப்பு மருந்துகள் உபயோகப்படுத்த வேண்டும். கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**காய்கறி சாகுபடி: அதிக மகசூல் பெற அதிகாரி ஆலோசனை**

காஞ்சிபுரம், : காய்கறி சாகுபடியில் அதிக மகசூல் பெற ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.இதுகுறித்து காஞ்சிபுரம் விதை

பரிசோதனைஅலுவலர் பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆண்டு தோறும் காய்கறி பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, உத்திரமேரூர், மதுராந்தகம், பவுஞ்சூர், திருக்கழுக்குன்றம் வட்டங்களில் காய்கறிகள் சாகுபடி பெருமளவில் செய்யப்படுகிறது. பருவ மழை குறைந்துள்ளதால் இந்தாண்டு காய்கறி சாகுபடியை தேர்ந்தெடுப்பது நல்ல பலனை தரும்.

அந்த வகையில் வெண்டை, கத்திரி, புடலங்காய், அவரை, பூசணி, மிளகாய் சாகுபடி செய்வதன் மூலம் குறைந்த தண்ணீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம். தொடர் வருமானமும் ஈட்டலாம். தற்போது வீரிய ஒட்டு ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்களை பயன்படுத்தும்போது முளைப்பு திறன் இருப்பது அவசியம். எனவே, காய்கறி விதை விற்பனையாளர்கள், விவசாயிகள் தங்களிடமுள்ள விதை மாதிரிகளை விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரில் ரூ30 செலுத்தி பரிசோதனை செய்து முடிவுகளை பெற்ற பின் சாகுபடி செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தரமான தென்னங்கன்றுகள் வினியோகம்**

உடுமலை,: உடுமலை அருகே 102 ஏக்கரில் தென்னை நாற்றுப்பண்ணை துவங்கப்பட்டுள்ளது. அங்கு தரமான தென்னங்கன்று உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை இன்று விவசாயிகளுக்கு எம்எல்ஏ சண்முகவேலு வினியோகம் செய்கிறார். தமிழகத்தில் நாலரை லட்சம் ஹெக்டேர் நிலத்தில் தென்னை விவசாயம் நடக்கிறது. திருப்பூர் மாவட்டத்தில் 58ஆயிரம் ஹெக்டேரிலும்,கோவை மாவட்டத்தில் 85

ஆயிரம் ஹெக்டேர் நிலத்திலும் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. பிஏபி பாசனப்பகுதியில் தென்னை முக்கிய பயிராக விளங்குகிறது. தமிழகத்தை சேர்ந்த விவசாயிகள் கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் உருவாக்கப்படும் தென்னங்கன்றுகளை தான் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டிலும் தரமான தென்னை விதைப்பண்ணை அமைக்க வேண்டுமென்ற விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இந்த விதைப்பண்ணையை தென்னை வளர்ச்சி வாரியம் உருவாக்கியது.உடுமலைஅருகே உள்ள திருமூர்த்தி அணை அருகே இந்தமாதிரி செயற்கை தென்னை விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக 102.6 ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்கு தமிழக அரசு அளித்துள்ளது. அந்த நிலம் சுத்தப்படுத்தப்பட்டு சுற்றிலும் வேலி அமைக்கப்பட்டது.

பிறகு 5 ஏக்கர் நிலத்தில் தரமான தென்னை நாற்றுப்பண்ணை அமைக்கப்பட்டது. இங்கு 2 லட்சம் தென்னை நாற்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. நெட்டை,குட்டை இனத்தில் தலா 5 ரகங்களில் தென்னை நாற்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை விவசாயிகளுக்கு வினியோகிக்கும் விழா விதைப்பண்ணையில் இன்று காலையில் நடக்கிறது. எம்எல்ஏ சண்முகவேலு இதில் கலந்து கொண்டு தென்னங்கன்றுகளை வினியோகிக்கிறார். நிகழ்ச்சியில் தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

**சமீபத்திய சூறாவளி காற்றால் மேராக்காய் விவசாயம் பாதிப்பு**

குன்னூர், : குன்னூர் அருகே தூதூர்மட்டம், கிளிஞ்சடா, டெரேமியா, சட்டன், கரும்பாலம் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளது. இந்த கிராமங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் மலைத்தோட்ட காய்கறி

பயிர்களான பீன்ஸ், கோஸ், உருளைகிழங்கு, மேராக்காய் உள்ளிட்டவற்றை தங்களின் விவசாய நிலத்தில் பயிர் செய்து வருகின்றனர். இங்குள்ள பெரும்பாலான விவசாய நிலங்களை வனப்பகுதியும், தேயிலை தோட்டங்களும் சூழ்ந்துள்ளதால் வன விலங்குகள் உணவு மற்றும் குடிநீர் தேடி விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களை நாசப்படுத்தி வருவது தொடர் கதையாக உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிக்கப்படைந்து வருகின்றனர்.

விவசாயிகள் தங்களின் பயிர்களை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாக்க இரவு பகலாக காவல் காத்து வந்தாலும் அதனையும் மீறி காட்டெருமை, கடமான், முயல், காட்டுபன்றி உள்ளிட்ட விலங்குகள் காய்கறி பயிர்களை தின்றும், சேதப்படுத்தியும் செல்கிறது. இதனால் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் வனவிலங்களிடமிருந்து பயிர்களை பாதுகாக்க பல்வேறு யுக்திகளாக பாதுகாத்து வருவது வழக்கம்.

இந்நிலையில் மாவட்டத்தில் தற்போது பரவலான மழை பெய்துள்ள நிலையில் தூதூர்மட்டம், கிளிஞ்சடா, சட்டன், கரும்பாலம் உள்ளிட்ட பகுதியிலுள்ள விவசாயிகள் பெரும்பாலும் மேராக்காய் பயிரை சாகுபடி செய்துள்ளனர். சூறாவளி காற்றில் கொடியில் இருந்து கீழே விழுந்தும் மழையில் அழுகியும் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே நஷ்டம் அதிகம் ஏற்பட்ட தகுதியுள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையினர் அல்லது மாவட்ட நிர்வாகம் மானியம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 2011ம் ஆண்டில் நிறுத்தப்பட்ட விவசாய கருவிகளை மீண்டும் மானியத்தில் வழங்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

கொள்ளிடம், : 2011ம் ஆண்டு முதல் வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விவசாய கருவிகளை மானிய விலையில் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.குறுவை மற்றும் சம்பா சாகுபடி செய்வதற்கும் ஆரம்ப நிலையிலிருந்து அறுவடை செய்யும்

வரை வேளாண் இடுபொருட்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பயன்படுத்தும் வகையில் 2011ம் ஆண்டு வரை மிக அவசியமானதும், முக்கியமாக பயன்படுத்தும் வகையிலும் உள்ள விவசாய கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்தன. அலுமினியத்தாலான அன்னக்கூடை, மண்வெட்டி, கடப்பாைர, இரும்புச்சட்டி, பாலித்தீன் தார்ப்பாய் உள்ளிட்ட அன்றாடம் பயன்படக்கூடிய கருவிகள் கடந்த 2011ம் ஆண்டிலிருந்து விவசாயிகளுக்கு வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கு பதிலாக வட்டார அளவில் இரண்டு அல்லது மூன்று நடவு இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இதை செல்வாக்குள்ள நபர்கள் மட்டுமே வாங்கி பயன்படுத்துகின்றனர். அதேபோல் பாசனத்துக்கு தண்ணீர் எடுத்து செல்வதற்கு மானிய விலையில் வழங்கப்படும் குழாய்களும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. இதுகுறித்து கொள்ளிடம் ஒன்றிய விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சிவப்பிரகாசம்பிள்ளை கூறுகையில், அனைத்து விவசாயிகளுக்கும் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த கருவிகள் 2011ம் ஆண்டிலிருந்து வழங்கவில்லை. விவசாயிகளுக்கு அவசியாமன அன்னக்கூடை, கடப்பாரை, மண்வெட்டி, பாலித்தீன் தார்பாய் உள்ளிட்ட கருவிகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கொள்ளிடம், : 2011ம் ஆண்டு முதல் வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விவசாய கருவிகளை மானிய விலையில் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.குறுவை மற்றும் சம்பா சாகுபடி செய்வதற்கும் ஆரம்ப நிலையிலிருந்து அறுவடை செய்யும் வரை வேளாண் இடுபொருட்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சிறு மற்றும்

குறு விவசாயிகளுக்கு பயன்படுத்தும் வகையில் 2011ம் ஆண்டு வரை மிக அவசியமானதும், முக்கியமாக பயன்படுத்தும் வகையிலும் உள்ள விவசாய கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்தன. அலுமினியத்தாலான அன்னக்கூடை, மண்வெட்டி, கடப்பாரை, இரும்புச்சட்டி, பாலித்தீன் தார்ப்பாய் உள்ளிட்ட அன்றாடம் பயன்படக்கூடிய கருவிகள் கடந்த 2011ம் ஆண்டிலிருந்து விவசாயிகளுக்கு வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கு பதிலாக வட்டார அளவில் இரண்டு அல்லது மூன்று நடவு இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இதை செல்வாக்குள்ள நபர்கள் மட்டுமே வாங்கி பயன்படுத்துகின்றனர். அதேபோல் பாசனத்துக்கு தண்ணீர் எடுத்து செல்வதற்கு மானிய விலையில் வழங்கப்படும் குழாய்களும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. இதுகுறித்து கொள்ளிடம் ஒன்றிய விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சிவப்பிரகாசம்பிள்ளை கூறுகையில், அனைத்து விவசாயிகளுக்கும் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த கருவிகள் 2011ம் ஆண்டிலிருந்து வழங்கவில்லை. விவசாயிகளுக்கு அவசியாமன அன்னக்கூடை, கடப்பாரை, மண்வெட்டி, பாலித்தீன் தார்பாய் உள்ளிட்ட கருவிகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**தஞ்சையில் நாளை நாட்டுக் கோழி வளர்ப்பு ஒரு நாள் பயிற்சி முகாம்**

தஞ்சை, : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் நாட்டுக் கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது.தஞ்சை- திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் புதிய மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இப்பயிற்சி நடைபெற உள்ளது. நாளை காலை 9 மணிக்கு தொடங்க உள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டு

வர வேண்டும். மேலும் விவரங்களுக்கு தலைவர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர் என்ற முகவரியிலோ அல்லது 98424 55833 என்ற கைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

**களைக்கட்டுப்பாடு அவசியம் தேர் திறன் களைக்கொல்லியால் கரும்பு பயிரில் அதிக மகசூல் வேளாண் அதிகாரி வழிகாட்டல்**

சேதுபாவாசத்திரம், : தேர்திறன் களைக்கொல்லியை பயன்படுத்தி கரும்பு பயிரில் அதிக மகசூல் பெறலாம் என வேளாண் அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: கரும்பு பயிரில் களைச் செடிகளால் பயிருக்கு 3 சதவீத சேதாரமும், பூச்சிகளால் 20 சதவீத சேதாரமும், நோய்க்கிருமிகளால் 26 சதவீத சேதாரமும், எலிகளால் 6 சதவீத சேதாரமும் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. களைகள் பயிருக்குத் தேவையான சத்துக்களை எடுத்துக் கொள்வதுடன் பூச்சிகள் மற்றும் நோய்க் கிருமிகள் தங்கும் இடமாக இருந்து விடுகிறது. பொதுவாக கரும்பில் 5 வகையான களைகள் தென்படுகிறது. புல்வகை, அகன்ற இலை வகை, கோரை வகை, ஒட்டுண்ணி வகை மற்றும் கொடிவகை களைகள் கரும்பு பயிரில் சேதம் ஏற்படுத்துகிறது. இதைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த களை நிர்வாகம் கையாள வேண்டும். ஒருங்கிணைந்த களை நிர்வாகம் என்பது உழவியல், பயிர் சுழற்சி, பண்ணைக் கருவிகள் மற்றும் பண்ணை எந்திரங்கள் பயன்படுத்தி களை எடுத்தல், களைக்கொல்லி மருந்து பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உயிரியல் மூலம் சூழ்நிலைக்கேற்றவாறு ஒருங்கிணைந்து களைகளை கட்டுப்படுத்துவதாகும். உழவியல் முறை என்பது கோடை உழவு மூலம் கட்டுப்படுத்துவது.

வரப்புகளை சுத்தமாக வைத்திருத்தல், பயிர் எண்ணிக்கை பராமரித்தல், ஊடு பயிர் செய்தல், பயிர் சுழற்சி, சொட்டுநீர் பாசன முறைகளை பின்பற்றி நீர் பாய்ச்சுதல் மூலமாக களைகளைக் கட்டுப்படுத்தலாம். களைக்கொத்து, மண்வெட்டி, களை உருளும் கருவி, ஜூனியர் கலப்பை, பண்ணை எந்திரங்களாகிய மினி டிராக்டர், பவர் டில்லர், களை எடுக்கும் எந்திரம் ஆகிய எந்திரங்கள் மூலம் களை எடுக்கும்போது போதுமான இடைவெளி கொடுக்க வேண்டும். களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்தும்போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

தேர்திறன் உள்ள களைக்கொல்லி, தேர்திறன் அற்ற களைக்கொல்லி என இரு வகையான களைக்கொல்லிகள் உள்ளன. தேர்திறன் களைக்கொல்லி என்பது பயிரை பாதிக்காமல் பயிரிடையே வளரும் களைகளை மட்டும் அழிக்கக்கூடியதாகும். கரும்பில் அகன்ற இலை அல்லது பூண்டு வகை களைகள் அதிகம் காணப்படும் இடங்களில் அட்ரசின் என்ற களைக்கொல்லியினை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் கரும்புக்கரனை விதைத்த 3 வது நாள் தெளித்து களை வளர விடாமல் தடுக்க வேண்டும். அட்ரசின் தெளித்தபின் அருகுகோரை போன்ற களைகள் தென்பட்டால் தேர்திறன் அற்ற களைக்கொல்லியான க்ளைச்சோபெட் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் கலந்து அத்துடன் 20 கிராம் அமோனியம் சல்பேட் உரத்தை கலந்து கைத்தெளிப்பான் கொண்டு கரும்பு பயிரில் படாமல் களைகள் மீது மட்டும் படும்படி தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்கின்ற போது மருந்து தெளித்த 15 நாட்கள் முதல் 20 நாட்களில் கோரைக்கிழங்கு மற்றும் அருகம்புல்லின் வேர்த்தண்டு காய்ந்து அழிந்து விடும். எந்த களைக்கொல்லி பயன்படுத்தினாலும் மண்ணில் ஓரளவு ஈரம் இருக்க வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த களை நிர்வாகத்தைக்

கையாளும்போது கரும்பு பயிரில் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் அந்த செய்திகுறிப்பில் கூறியுள்ளார்.